பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
13 04 2025 SUNDAY 7 15 PM
ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- வக்ஃப் திருத்தச் சட்டத்தை அனைத்து மாநிலங்களும் செயல்படுத்த வேண்டியது கட்டாயம் என்று மத்திய அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.
- மருந்து உற்பத்தியில் இந்தியா முன்னணியில் உள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.
- பாரத ரத்னா அம்பேத்கரின் கனவுகளை நனவாக்கும் வகையில் மத்திய அரசு செயல்பட்டு வருவதாக உள்துறை இணையமைச்சர் திரு. நித்யானந்த ராய் தெரிவித்துள்ளார்
- யுக்ரைன் மீது ரஷ்யா நடத்திய ஏவுகணை தாக்குதலில், இரண்டு குழந்தைகள் உட்பட 32 பேர் உயிரிழந்தனர்.
- உலக கோப்பை துப்பாக்கி சுடும் போட்டி, பெருவின் லிமாவில் இன்று தொடங்குகிறது.

>>>>>><<<<<<

வக்ஃப் திருத்தச் சட்டத்தை அனைத்து மாநிலங்களும் செயல்படுத்த வேண்டியது கட்டாயம் என்று மத்திய அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.

ஹூப்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த திருத்தச் சட்டம் மத்திய சட்டம் என்றும் அவர் கூறினார்.

இதனை செயல்படுத்துவதைத் தவிர வேறு வாய்ப்புகள் இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இதுதொடர்பாக மேற்குவங்கத்தில் நடைபெற்ற போராட்டங்களை, அம்மாநில அரசு முறையாக கையாளவில்லை என்றும் திரு. பிரல்ஹாத் ஜோஷி குற்றம் சாட்டினார்.

இதற்கிடையே, மேற்குவங்கத்தில் நிகழ்ந்த வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக அம்மாநில ஆளுநர் திரு. அனந்த போஸ் மத்திய அரசிடம் அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

Murshidabad-ல் கடந்த சில நாட்களாக நடைபெற்றுவரும் வன்முறைச் சம்பவங்கள் குறித்து இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையே, பாதிக்கப்பட்ட மாவட்டத்திற்கு கூடுதலாக 23 காவல்துறை அதிகாரிகளை மேற்குவங்க அரசு அனுப்பியுள்ளது.

அம்மாவட்டத்தில் நிலைமை கட்டுக்குள் வரும்வரை இந்த அதிகாரிகள் அங்கு பணிபுரிவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

அரசியல் சாசன சிற்பி பாரத ரத்னா அம்பேத்கரின் கனவுகளை நனவாக்கும் வகையில் பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு செயல்பட்டு வருவதாக உள்துறை இணையமைச்சர் திரு. நித்யானந்த ராய் கூறியுள்ளார்.

இன்று பீகாரில் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு பேசிய அவர், வறுமையை அகற்றுவதற்காக மத்திய அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளை பட்டியலிட்டார்.

அம்பேத்கருக்கு உரிய மரியாதையை காங்கிரஸ் வழங்கவில்லை என்றும் திரு. நித்யானந்த ராய் குற்றம் சாட்டினார்.

>>>>>><<<<<<

மருந்து உற்பத்தியில் இந்தியா முன்னணியில் உள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

உற்பத்திக்கான இந்தியா இயக்கத்தின் கீழ் அளிக்கப்பட்ட சலுகைகளும் இதற்கு காரணம் என்று மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

குறைந்த செலவில் தரமான மருந்துகள் இந்தியாவில் உற்பத்தி செய்யப்படுவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மருந்துகள் வெளிநாடுகளுக்கும் விநியோகிக்கப்படுவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

>>>>>><<<<<<

இந்தியா – ரஷ்யா இடையேயான 78 ஆண்டுகால தூதரக உறவை கொண்டாடும் வகையில், இன்று புதுதில்லியில் சைக்கிள் பேரணி நடைபெற்றது.

300க்கும் மேற்பட்டோர் இதில் பங்கேற்றனர்.

78 ஆண்டுகளைக் கடந்து, இருநாடுகளுக்கு இடையேயான உறவு தொடர்ந்து வலுப்பெற்று வருவதாக இந்தியாவிற்கான ரஷ்ய தூதர் திரு. Denis Alipov கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், கல்வி, அறிவியல், கலாச்சாரம், தொழில்நுட்பம், வர்த்தகம் உள்ளிட்ட துறைகளில் பரஸ்பர உறவு வலுப்பெற்றுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

>>>>>><<<<<<

உத்தரபிரதேசத்தில் காங்கிரஸ் மற்றும் சமாஜ்வாதி கட்சிகள், ஷெட்யூல்டு மற்றும் பழங்குடியினரை அரசியல் ஆதாயத்திற்கு மட்டுமே பயன்படுத்தி வருவதாக அம்மாநில முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் குற்றம் சாட்டியுள்ளார்.

லக்னோவில் அம்பேத்கர் தொடர்பான கருத்தரங்கில் கலந்து கொண்டு அவர் உரையாற்றினார்.

நலிவடைந்த பிரிவினருக்கான நிலங்களை இவ்விரு கட்சிகளும் ஆக்கிரமிப்பு செய்ததாகவும், தற்போது அவை அகற்றப்பட்டிருப்பதாகவும் யோகி ஆதித்யநாத் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

ஞாயிறு தோறும் சைக்கிள் பயணம் - இயக்கத்திற்கு மக்கள் ஆதரவு பெருகி வருவதாக மத்திய விளையாட்டுத்துறை செயலர் திருமதி. சுஜாதா சதுர்வேதி கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் சைக்கிள் பயண இயக்கத்தை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

இன்று மட்டும் 300-க்கும் மேற்பட்ட சைக்கிள் பயண நிகழ்ச்சிகள் நடைபெற்றதாக அவர் கூறினார்.

இதில் லட்சக்கணக்கானோர் பங்கேற்றதாகவும் திருமதி. சுஜாதா சதுர்வேதி தெரிவித்தார்.

>>>>>><<<<<<

கர்நாடகாவில் சாதிவாரி கணக்கெடுப்பு அறிக்கை குறித்து, அமைச்சரவையில் விவாதிக்கப்படவுள்ளதாக அம்மாநில துணை முதலமைச்சர் திரு. D.K. சிவக்குமார் தெரிவித்துள்ளார்.

இன்று பெங்களூருவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த அறிக்கை குறித்து விரிவாக ஆலோசித்து முடிவெடுக்கப்படும் என்றார்.

இதுகுறித்து விவாதிப்பதற்காக சிறப்பு அமைச்சரவைக் கூட்டம், வரும் வியாழக்கிழமை நடைபெறவுள்ளதாகவும் திரு. D.K. சிவக்குமார் கூறினார்.

>>>>>><<<<<<

ஆந்திராவில் பட்டாசு தொழிற்சாலையில் நேரிட்ட வெடிவிபத்தில் ஆறு பேர் உயிரிழந்தனர்.

Anakapalli மாவட்டத்திற்கு உட்பட்ட கைலாசப்பட்டினத்தில் உள்ள பட்டாசு ஆலையில் இந்த விபத்து நேரிட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

இதற்கிடையே இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 2 லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி அறிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் இதுதொடர்பாக அவர் விடுத்துள்ள செய்தியில், காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஆந்திர முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடுவும் இந்த விபத்து குறித்து அதிர்ச்சி தெரிவித்துள்ளார்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தேவையான அனைத்து உதவிகளையும் தமது அரசு வழங்கும் என்று அவர் கூறியுள்ளார்.

காயமடைந்தவர்களுக்கு உயரிய மருத்துவ சிகிச்சை அளிக்குமாறு அதிகாரிகளுக்கு முதலமைச்சர் அறிவுறுத்தியுள்ளதாக அம்மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

>>>>>><<<<<<

சத்திஷ்கரில் பாசன வசதிகளை மேம்படுத்துவதற்காக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அம்மாநில துணை முதலமைச்சர் திரு. Arun Sao கூறியுள்ளார்.

செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில் இதனை தெரிவித்த அவர், பல்வேறு புதிய திட்டங்களும் செயல்படுத்தப்படவுள்ளதாக கூறினார்.

கடைமடைப் பகுதிகளுக்கும் உரிய நீர் சென்றடைவதை உறுதி செய்வதற்கு இந்த திட்டங்கள் உதவிடும் என்றும் திரு. Arun Sao தெரிவித்தார்.

>>>>>><<<<<<

பஞ்சாபில் ஒன்றரை கிலோ வெடிபொருட்களை வைத்திருந்த இரண்டு பேரை அம்மாநில காவல்துறையினர் கைது செய்தனர்.

ஃபெரோஸ்பூரில் காவல்துறையினரால் கைது செய்யப்பட்ட இவர்கள்ஜெர்மனியிலிருந்து செயல்படும் தீவிரவாத அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்று அம்மாநில காவல்துறை தலைவர் திரு. கவ்ராவ் யாதவ் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

தங்கம் மற்றும் போதைப்பொருட்கள் கடத்தப்படுவதை தடுப்பதற்கான நடவடிக்கைகளை தீவிரப்படுத்துவது என இந்தியாவும், நேபாளமும் முடிவு செய்துள்ளன.

இருநாடுகளின் சுங்கத்துறை உயரதிகாரிகளிடையே நடைபெற்ற பேச்சுக்களின்போது, இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டதாக நிதியமைச்சகத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

>>>>>><<<<<<

யுக்ரைன் மீது ரஷ்யா நடத்திய ஏவுகணை தாக்குதலில், இரண்டு குழந்தைகள் உட்பட 32 பேர் உயிரிழந்தனர். 84 பேர் காயமடைந்தனர்.

Sumy நகரை குறிவைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக யுக்ரைன் அரசு கூறியுள்ளது.

இந்த தாக்குதல் சம்பவத்திற்கு அந்நாட்டு அதிபர் திரு. Volodymyr Zelenskyy கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

ஈரான் அணுசக்தி திட்டங்கள் தொடர்பாக அமெரிக்கா அந்நாட்டுடன் வரும் 19ஆம் தேதி இரண்டாம் கட்ட பேச்சுக்களை நடத்தவுள்ளது.

இரு நாடுகளுக்கு இடையே மஸ்கட்டில் நடைபெற்ற முதல்கட்ட பேச்சுவார்த்தை சுமுகமாக நடைபெற்றதாக ஈரான் வெளியுறவு அமைச்சர் திரு. Abbas Araghchi செய்தியாளரிகளிடம் தெரிவித்தார்.

இந்த விவகாரத்தில் விரைவில் ஒப்பந்தம் ஒன்று ஏற்படும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

இரண்டாம் கட்ட பேச்சுக்களின் போது இதற்கான ஒப்பந்தம் கையெழுத்தாகும் என்றும் திரு. Abbas Araghchi நம்பிக்கை தெரிவித்தார்.

>>>>>><<<<<<

மியான்மரில் இன்று நிலஅதிர்வு உணரப்பட்டது.

அது ரிக்டர் அளவில் 5 புள்ளி ஐந்தாக பதிவானது.

ஹிமாச்சலப்பிரதேசத்திலும் நிலஅதிர்வு உணரப்பட்டதாகவும், இது ரிக்டர் அளவில் 3 புள்ளி நான்காக பதிவானதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>><<<<<<

மிஸோரமில் 52 கோடி ரூபாய் மதிப்பிலான போதைப்பொருளை அதிகாரிகள் பறிமுதல் செயதனர்.

இது தொடர்பாக இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக அம்மாநில காவல்துறையினர் தெரிவித்தனர்.

>>>>>><<<<<<

நாட்டின் பல்வேறு பகுதிகளில் கோடை வெயிலின் தாக்கம் மேலும் அதிகரிக்கக் கூடும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

குஜராத்தில் நாளை மறுநாள் முதல் அனல்காற்று வீசக்கூடும் என்று வானிலை ஆய்வு மையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

ராஜஸ்தான், மத்தியப்பிரதேசம், பஞ்சாப், ஹரியானா ஆகிய மாநிலங்களிலும் வரும் வெள்ளிக்கிழமை வரை அனல்காற்று வீசக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தில்லி யூனியன் பிரதேசத்திலும் வெயிலின் தாக்கம் அதிகரித்து காணப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

உலக கோப்பை துப்பாக்கி சுடும் போட்டி, பெருவின் லிமாவில் இன்று தொடங்குகிறது.

வரும் 22ஆம் தேதிவரை நடைபெறவுள்ள இப்போட்டியில் இந்தியாவின் சார்பில் மனுபாக்கர், சவ்ரப் சௌத்ரி, வருண் தோமர் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

>>>>>><<<<<<

அயர்லாந்தில் நடைபெற்ற சர்வதேச பில்லியட்ஸ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் பங்கஜ் அத்வானி வெள்ளிப்பதக்கம் வென்றார்.

இறுதிப்போட்டியில் இங்கிலாந்தின் David Causier, பங்கஜ் அத்வானியை வென்று தங்கப்பதக்கத்தை கைப்பற்றினார்.

>>>>>><<<<<<

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் பெங்களூரு அணி 9 விக்கெட் வித்தியாசத்தில் ராஜஸ்தான் அணியை வென்றது.

ஜெய்ப்பூரில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த ராஜஸ்தான் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 173 ரன் எடுத்தது.

174 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பின்னர் பேட் செய்த பெங்களூரு அணி 17 புள்ளி 3 ஓவரில் ஒரு விக்கெட் இழப்புக்கு 175 ரன் எடுத்து வெற்றிபெற்றது.

>>>>>><<<<<<

அரியலூரில் மாவட்ட அளவிலான செஸ் போட்டி இன்று தொடங்கியது.

>>>>>>end<<<<<<